**Crl. Misc.39**

**Pg. /2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC 28/ 2023**

**Deposition of Witness :LW16/ PW9**

| Name | **திருமதி. சித்ராதேவி காவல் உதவி ஆய்வாளர்** | Taluk | |
|---|---|---|---|
| Father Name | **உலகநாதன்** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 25.09.2024.** | | | |

**1 வது எதிரி ஆஜர். 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 2 வது எதிரி இறந்துவிட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது வெங்கமேடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.07.2021 ம்தேதி காலை 11 மணி அளவில் கரூர் அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது முதல் நிலை காவலர் தீபா என்பவர் 21.07.2021 ம்தேதி ஜோதி முருகேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய மனு எண். 418/2021 ன் படி மனு ரசீது வழங்கி இருந்ததை நான் விசாரணைக்கு பின்னர் நிலைய குற்ற எண். 16/2021, ச/பி. 494 இதசப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியிடப்படுகிறது.** பின்னர் நிலைய ஆஜரில் இருந்த ஜோதி முருகேஸ்வரி, சதாசிவம் , அங்காளபரமேஸ்வரி, கோகிலா, முகமது சுல்தான் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) அன்றைய தினமே மதியம் 12.30 மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

சாட்சிகளான ரமேஷ் மற்றும் அபிராமன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 8 ஆக குறியிடப்படுகிறது.** சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடி அலைந்ததில் வழக்கின் 1ம் எதிரி பாலசுப்ரமணி கரூர் திண்ணப்பா கார்னர் அருகில் 29.07.2021ம்தேதி பகல் 11 மணிக்கு நின்று கொண்டிருந்தவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3) பின்னர், சாட்சிகளான பாஸ்கர், சுதா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் மற்ற எதிரிகளான 2ம் எதிரி ராமசாமி, 3ம் எதிரி தெய்வநாயகி , 4மற்றும் 5 எதிரிகளான ரேவதி மற்றும் அம்சா ஆகியோர்களை 02.08.2021ம்தேதி கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்ற விவரம் தெரிய வந்தது. சாட்சிகளை விசாரணை செய்ததில் இவ்வழக்கின் எதிரிகள் வாதியை அவரது தந்தை வீட்டிற்கு பணம் வாங்கி வா என்று சொல்லியதாகவும், மேலும் வாதியின் 10 பவுன் நகைகளை பிடுங்கி கொண்டு அடித்து , கொலை மிரட்டல் செய்து துரத்தியுள்ளதும் விசாரணையில் தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டபிரிவை 494 இதச விலிருந்து 323, 498A , 406 , 506(i) , 494 இதசவாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியிடப்படுகிறது.**

**4)** மேலும், இவ்வழக்கின் 1ம் எதிரி தனது பெற்றோருடன் நித்யாவின் வீட்டிற்கு வந்து நித்யாவிடமும், அவரது பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் தனக்கு திருமணமாகவில்லை என்று கூறி முதல் திருமணம் மற்றும் குழந்தை உள்ளதை மறைத்து 2 வதாக நித்யாவை திருமணம் செய்து கொண்டதும், விசாரணையில் தெரியவந்ததால் இவ்வழக்கின் 4 மற்றும் 5 வது எதிரிகளான நித்யா மற்றும் சுதாவை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து எதிரிகள் நீக்கல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **எதிரிகள் நீக்கல் அறிக்கை அ.சா.ஆ. 10 ஆக குறியிடப்படுகிறது.** பின்னர், நித்யா ,

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

நடேசன், சரவணக்குமார் மற்றும் புஷ்பா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு நான் பணிமாறுதல் காரணமாக வேறுகாவல் நிலையத்திற்கு சென்றுவிட்டபடியால் மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) முதல் தகவல் அறிக்கை சொல்லியுள்ள விவரமான முதல் நிலை காவலர் தீபா என்பவர் நிலைய மனு ரசீது வழங்கிய பின்னர் வழக்கு கோப்பினை எந்த தேதியில் எந்த நேரத்தில் என்னிடம் ஒப்படைத்தார் என்றால் 21.07.2021 ம்தேதி 16.30 மணிக்கு என்னிடம் ஒப்படைத்தார். நான் இந்த வழக்கை பதிவு செய்ய எடுத்து கொண்ட நேரம் எவ்வளவு என்றால் 25 நிமிடங்கள் ஆனது. நான் இந்த வழக்கை பதிவு செய்யும் போது அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.5 வரையான நபர்கள் நான் ஏற்கனவே மனு ரசீது கொடுத்ததின் அடிப்படையில் விசாரித்தேன் என்றால் சரிதான்.

2) அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகளை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் அ.சா.1 ஐ 21.07.2021 ம்தேதி அன்றும், அ.சா.2 முதல் அ.சா. 5 வரையான நபர்களை 22.07.2021 ம்தேதி அன்று விசாரித்தேன். நான் இந்த வழக்கை பதிவு செய்ததற்கு பின்னிட்டும் மேற்கண்ட சாட்சிகளை 28.07.2021 ம்தேதியன்று விசாரித்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை பதிவு செய்ததற்கு பின்னிட்டு அ.சா.1 முதல் அ.சா.5 வரையான நபர்களை விசாரிக்க எவ்வளவு நேரம் எடுத்து கொண்டேன் என்றால் 2 மணி நேரம் ஆனது. சாட்சிகளை எத்தனை மணிக்கு விசாரித்து முடித்தேன் என்றால் காலையில் 10 மணிக்கு விசாரித்தேன். சாட்சிகளை விசாரணை செய்து அன்றே சாட்சிகளுடன் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். சாட்சி அ.சா.5 என பட்டியல் சாட்சி 5 முகம்மது சுல்தானை குறிப்பிட்டதாக சொல்லியுள்ளார்.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

3) சம்பவ இடத்தை எனக்கு அடையாளம் காட்டியது யார் என்றால் அ.சா.1 ஆகும். அ.சா.1 உடன் யாரெல்லாம் அந்த இடத்தில் இருந்தார்கள் என்றால் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையான நபர்கள் இருந்தார்கள். சம்பவ இடமாக குறிப்பிடபட்டிருக்கும் இடம் காலி இருக்க இடத்தில் இருக்க கூடிய வீடா அல்லது தொடர்ச்சியாக இருக்கிற வீடுகள் உள்ள பகுதியாக என்றால் தொடர்ச்சியாக வீடுகள் இருக்கும் பகுதி ஆகும். மாதிரி வரைபடத்தில் தொடர்ச்சியாக வீடு இருப்பதாகவும் எத்தனாவது வீடாக சம்பவம் இடம் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சம்பவ இடத்தை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். எத்தனாவது வீடு எதிரிகள் குடியிருக்கும் வீடு என்றால் கண்ணன் மேரேஜ் சென்டருக்கு பக்கத்தில் 2 வது வீடாக எதிரிகள் குடியிருக்கும் வீடு ஆகும்.

4) சம்பவ இடத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் இருந்தது என்றால் வரிசையாக 3 , 4 வீடுகள் இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், சம்பவ இடத்தில் இல்லாததை நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ம் 1 ம் எதிரியும் எத்தனை ஆண்டுகாலம் பிரிந்து வாழ்கிறார்கள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் 6 வருடங்கள் பிரிந்து வாழ்கிறார்கள். அ.சா.1 , 1 ம் எதிரியை விட்டு பிரிந்ததிலிருந்து 1 முதல் 5 எதிரிகள் மீது ஏதாவது வழக்கு தாக்கல் செய்ததாக விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் பொள்ளாச்சி நீதிமன்றத்தில் 2016 ம் ஆண்டு ஜீவனாம்சம் வழக்கு மற்றும் குடும்ப வன்முறை வழக்கு தாக்கல் செய்ததாக தெரிந்து கொண்டேன்.

5) அ.சா.1 க்கும், 1 ம் எதிரிக்கும் மேற்சொன்ன இரண்டு வழக்குகளை தவிர வேறு வழக்கு இல்லை என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.சா.1, 1 ம் எதிரிமீது விவாகரத்து கோரி பொள்ளாச்சி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார் என்றும், வழக்கானது இவ்வழக்கு புகாரின் போது நிலுவையில் இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி விவாகரத்து வழக்கை புகாரில் குறிப்பிட்டால் இவ்வழக்கிற்கு பாதகமாகும் என்பதால் நான் தெரிந்து கொண்டும், விவாகரத்து வழக்கை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 , 10 பவுன் நகைகளை என்னிடம் பிடிங்கி கொண்டு வீட்டை விட்டு துரத்தி விட்டார்கள் என்று

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

சொல்லியுள்ளபோது அது சம்பந்தமாக வெங்கமேடு காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்துள்ளதாக தெரிந்து கொண்டேன் என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

6) அ.சா.1 ற்கு அவரது பெற்றோர்கள் திருமணத்தின்போது 10 பவுன் நகைகள் கொடுத்ததற்கான ஆதாரமாக திருமண ஆல்பம் அல்லது வீடியோ கேசட் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1 ற்கு குடும்பம் நடத்துவதற்கு ஏதுவான உடல் சரியாக இல்லை என்று அ.சா.1 ஐ பரிசோதித்த மருத்துவர்கள் சொன்னதால் அ.சா.1 தன்னிச்சையாக பிரிந்து சென்றதாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள அ.சா.ஆ. 2 முதல் 4 புகைப்படங்களை யார் எனக்கு கொடுத்தது என்றால் அ.சா.1 புகாரோடு கொடுத்தார். அ.சா.ஆ.2 முதல் 4 புகைப்படங்கள் செல்போன் மூலமாகவோ, வீடியோ கேமரா மூலமாகவோ அல்லது வேறு எந்த கருவியில் எடுக்கப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

7) இந்த ஆவணங்கள் மெய்தன்மை பற்றி தெரிந்து கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் கேமரா மூலமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும். எந்த நபர் இந்த புகைப்படங்களை எடுத்தார் என்றும், அதற்கான சான்றிதழ்களை பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் வாதியிடமிருந்து பெறப்பட்ட புகைப்படங்கள் ஆகும். புகைப்படத்தின் மெய்தன்மை பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியாது. அ.சா.7 மற்றும் 8 ( பட்டியல் சாட்சிகள் 8, 10) , 1 ம் எதிரியுடன் திருமணம் நடந்தது பற்றி தெரிந்து கொள்ள திருமணம் நடந்த இடத்தில் இருந்த நபர்கள் யாரையாவது விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் இல்லை. அ.சா.8 காணாமல் போனதாக அவரது கணவர் அதை தாந்தோணிமலை காவல்நிலையத்தில்புகார் கொடுத்தார் என்றும், பின்னிட்டு அ.சா.8 வீட்டிற்கு திரும்பி வந்தவிவரம் தெரியும் என்றால் தெரியும். அ.சா.7 மற்றும் 8 அவர்களுக்கான உறவு முறை என்ன என்று எனது விசாரணையில் தெரியவில்லை என்றால் சரிதான்.

8) அ.சா.7 மற்றும் 8 ஆகியோர்கள் 1 ம் எதிரியுடன் திருமணம் நடந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.2 முதல் 4

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

வரையான ஆவணங்கள் சித்தரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்துள்ள வாக்குமூலங்கள் அனைத்தும் சாட்சிகள் என்னிடம் சொல்லப்படாதது என்றும் வழக்கிற்கு ஏற்றாற்போல் நான் தயார் செய்த வாக்குமூலங்கள் என்றால் சரியல்ல. அ.சா.8 ற்கும், 1 ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றும், 1 வது எதிரிக்கு அ.சா.8 ஐ யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. அ.சா. 7 ற்கும், 1 ம் எதிரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும், அவர்களுக்கு திருமணம் நடந்ததாக தாக்கல் செய்துள்ள சான்றிதழ்கள் போலியானது என்றால் சரியல்ல.

9) உண்மையிலேயே அ.சா.7 மற்றும் 8 , 1 ம் எதிரியுடன் திருமணம் நடந்திருந்தால் திருமணம் நடந்த இடத்தில் உள்ள நபர்களை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 , 1 ம் எதிரியை பழிவாங்குவதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகாரை சரிவர விசாரணை செய்யாமல் பொய்யான வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 , 1 ம் எதிரியை விட்டு பிரிந்து பல ஆண்டுகள் ஆனபிறகு அ.சா.1 , 1 ம்எ திரியின்மீது தாக்கல் செய்த வழக்குகள் தள்ளுபடி ஆனதற்கு பின்னிட்டு 1 வது எதிரியையும், அவரது குடும்பத்தாரையும் பழிவாங்க வேண்டுமென்பதற்காக , அ.சா.1 ற்கு செல்வாக்கை பயன்படுத்தி எங்களுக்கு அழுத்தம் கொடுத்ததால்தான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் 1 ம் எதிரிக்கு எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி விடுவிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**3 முதல் 5 எதிரிகள் தரப்பில் விசாரணை**

1) 3 முதல் 5 எதிரிகள் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றும், அ.சா.1 ம் 3 முதல் 5 எதிரிகள் ஒன்றாக வசித்து வரவில்லை என்றும் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. கூட்டுகுடும்பமாகத்தான் வசித்து வந்தார்கள். அ.சா.1 அவரது புகாரிலும், என்னிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் 3 முதல் 5 எதிரிகளை பற்றி

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

எந்த குற்றச்சாட்டும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், 3 முதல் 5 எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. 3 முதல் 5 எதிரிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு )
கரூர்.